யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC

# தவணைப் பரீட்சை, யூலை - 2015
# Term Examination, July - 2015

| அரசியல் விஞ்ஞானம் | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2016) |
|---|---|---|

## பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 01) **1** | 06) **1** | 11) **3** | 16) **4** |
| 02) **2** | 07) **1** | 12) **4** | 17) **5** |
| 03) **4** | 08) **5** | 13) **1** | 18) **3** |
| 04) **3** | 09) **2** | 14) **4** | 19) **1** |
| 05) **4** | 10) **4** | 15) **2** | 20) **2** |

## பகுதி - II

### A பகுதி

01) சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில்
02) டேவிட் ரூமன், டேவிட் ஈஸ்டர், றொபேட்டால், சார்ள்ஸ் ஈ மெரியம்
03) அரிஸ்ரோட்டில், மாக்கியா வல்லி
04) 3 ம் உலக நாடுகளில் ஜனநாயகம் பலவீனமடைந்தமை
இயற்கை வளங்கள் நிறைந்திருந்தாலும் பொருளாதார விருத்தியினை எட்ட முடியாதநிலை
ஊழல் மோசடிகள் அதிகரித்தமை
05) பணி ரீதியான அதிகாரப் பகிர்வு
பிரதேச ரீதியான அதிகாரப் பகிர்வு
06) உயர் கலாசாரம், தாழ் கலாசாரம்
07) உத்தியோக சார்புடையோர் - 9 பேர்
உத்தியோகப் பற்றற்றோர் - 6 பேர்
08) வரையறுக்கப்பட்ட வாக்குரிமை
படித்த இலங்கையர் தெரிவு
உத்தியோகப் பற்றற்றோர் எண்ணிக்கை அதிகரிப்பு
09) சமய மறுமலர்ச்சி இயக்கம்
சூரியமல் இயக்கம்
கலால் இயக்கம்
இடதுசாரி இயக்கம்
10) பிரதம காரியதரிசி
நிதிக் காரியதரிசி
சட்டக் காரியதரிசி

### B பகுதி

01)

(i) அரசறிவியல் என்பது 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்ததொரு துறையாகும். ஆயினும் 20ம் நூற்றாண்டிலேயே அது நவீன கற்கை நெறியாகியது. தோற்றம் பெற்ற காலத்திலிருந்து இற்றை வரை அரசறிவியல் என்பதற்கு ஒருமித்த வரைவிலக்கணத்தை கூறமுடியாதது போலவே அரசறிவியலின் பாடப்பரப்புப் பற்றியும் ஒருமைத் தன்மையான கருத்துக்களை முன்வைக்க முடியாதுள்ளது. ஏனெனில் அரசறிவியலானது கால

மாற்றத்திற்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப மாற்றமடைந்து, விரிவடைந்து செல்கின்றதொரு துறையாக இருப்பதே காரணமாகும்.

ஆயினும் அரசு என்பது அரசறிவியலின் மையப்பொருளாக விளங்குவது தவிர்க்க முடியாததாக இன்றுவரை காணப்படுகிறது. அத்துடன் அரசாங்கம், அதிகாரம் என்பவற்றோடு மேலும் பல புதிய அம்சங்களையும் மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் உள்ளடக்கியவாறே பாடப்பரப்பு விரிவடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில்

அரசு மற்றும் அரசாங்கம்
அதிகாரம்
அரசியற் கோட்பாடுகள், தத்துவங்கள்
அரசியற் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம்
சட்டமும் நீதியும்
உரிமை, சுதந்திரம், சமத்துவம்
ஒப்பீட்டு அரசியல்
பொது நிர்வாகம்
கொள்கை ஆய்வு
சர்வதேச அரசியல்
நடத்தை வாதம்
மோதல் முகாமைத்துவம் அதன் தீர்வுகள் போன்றவற்றுடன்
அரசியல் கலாசாரம்
அரசியல் சமுதாயப்படுத்தல்
அரசியல் நடத்தை
அரசியல் உயர்குழாம்
அரசியல் வன்முறை
சிவில் சமூகம்
நல்லாட்சி

போன்ற புதிய அம்சங்களும் அரசறிவியலின் பாடப்பரப்பினுள் உள்வாங்கப்பட்டுள்ளமை முக்கியமானதொரு அம்சமாகும்.

(ii) மனிதனொருவன் அரசியலைப் பல்வேறு வழிகளில் கற்றுக்கொள்கின்றான். அவ்வாறான வழிமுறைகள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டு பிரதான இரு வழிமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளது.

(1) முறைசார் வழிமுறை
(2) முறைசாரா வழிமுறை

முறைசார் வழிமுறை என்பது ஒரு திட்டமிட்ட ரீதியில் ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் அரசறிவியலைக் கற்றுக் கொள்ளும் முறையாக காணப்படுகிறது.

அதாவது பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், வேறு கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் பாடத்திட்டங்களினூடாக அரசியலைப் பயில்கின்றனர். அத்துடன் பாடத்திட்டங்களுக்கு புறம்பாக இணைப்பாடவிதான செயற்பாடகளினூடாகவும் அரசியலைப் பயில்கின்றான். அதாவது விளையாட்டு நிகழ்வுகள், மன்ற நிகழ்வுகள், தேசிய விழாக்கள் போன்றவற்றில் கலந்து கொள்வதன் மூலம் தேசிய கொடி, கீதம் என்பவற்றுக்கு மதிப்பளித்தல் வெற்றி தோல்விகளை சமமாக மதித்தல், விட்டுக் கொடுத்தல், தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல் போன்ற பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொள்கிறான். இவ்வாறே முறைசார் வழிமுறையில் அரசறிவியலைப் பயின்று கொள்கிறான்.

முறைசாரா வழிமுறை என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களுக்கப்பால் பல்வேறு வழிகளில் அரசியலைக் கற்றுக் கொள்வதைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக ஒரு பிள்ளை பிறந்தது முதல் குடும்பத்திலிருந்து பல விடயங்களைக் கற்றுக் கொள்கிறது. அதுபோல தொழில் நிறுவனங்கள், அரசியற் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், ஊடகங்கள், சமய

தலைவர்கள், பிரபல்யம் வாய்ந்தவர்கள், பொருளாதார பின்னணி போன்றவற்றின் மூலம் ஒருவர் அரசியலைப் பயின்று கொள்வதே முறைசாரா வழிமுறையாகும்.

02)

(i) பாசிசம் என்பது 20ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்று பிரபல்யமாக துரிதமாக வளர்ச்சியடைந்து மிகத் துரிதமாகவே வீழ்ச்சியடைந்த கோட்பாடாகவே பாசிசம் என்பது விளங்குகிறது.

பாசிசம் என்பது இத்தாலியில் பெனிட்டோ முசோலினி என்பவரால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதொரு கோட்பாடாகும். பாசிசம் என்பது ''கம்புகளின் கட்டு'' எனப்படும். அதாவது ஒன்றுதிரட்டப்பட்ட பலத்தின் அடிப்படையில் அரசு நிலைபெறும் என்பதை எடுத்துக்கூறுகிறது. இப்பாசிசக் கோட்பாடானது அரசுக்கே முதலிடம் கொடுக்கிறது. இந்நிலையில் பாசிசம் கூறும் தனிமனித நிலையானது மிகவும் தாழ்நிலையிலேயே காணப்படுகிறது.

அதாவது மக்கள் அரசுக்காகவே செயற்பட வேண்டும் என்கிறது. தனி மனிதன் கருத்துக்களை வெளிப்படுத்தவும், சுயமாக செயற்படவும் முடியாத நிலையில் உரிமைகள் மறுக்கப்பட்டவனாக காணப்பட்டான். நம்பு, மணி, போர்பரி என்ற கோசங்களுக்கு ஏற்ப அரசுக்காக பணி செய்யவும் போர் புரியவும் நிர்ப்பந்திக்கப்பட்டான்.

இவ்வாறே உரிமைகள் மறுக்கப்பட்டவனாக, அடக்கப்பட்டவனாக தனிமனித நிலையானது மோசமானதாக காணப்பட்டது என்றால் மிகையல்ல.

(ii) அரசியல் சமுதாயப்படுத்தல் என்பது அரசியல் நிலமைகளுக்கு ஏற்ப ஒருவர் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்வதாகும். அதாவது மக்கள் அரசியல் மனப்பாங்குகளையும் விழுமியங்களையும் பெற்றுக்கொள்வதற்கான செயன்முறை எனப்படும். இவ்வரசியல் சமதாயப்படுத்தலே மக்களின் அரசியல் நடத்தை, அரசியல் கலாசாரம் என்பவற்றுக்கு அடிப்படையாகிறது. சிறந்த அரசியற் சமுதாயப்படுத்தல் காணப்படும் இடத்தில் சிறந்த அரசியற் கலாசாரம் நிலவும் என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் மக்கள் அரசியலில் பங்கேற்கவும் கலந்து கொள்ளவும் அரசியல் சமுதாயப்படுத்தல் பெரிதும் இன்றியமையாதது ஆகும்.

இவ்வகையில் அரசியல் சமுதாயப்படுத்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக குடும்பம், ஊடகம், நண்பர்கள், ஆசிரியர்கள், சமவயது குழுவினர், சமயம், இளம்வயது, பால்நிலை என்பனவும் விளங்குகின்றன.

(iii) ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக முன்வைக்கப்படும் ஆட்சியாகும். இவ் ஜனநாயகம் பண்டைக்காலம் முதல் நிலவியமைக்கான சான்றுகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. ஜனநாயகமானது பிரதானமாக இரண்டு வகைகளாக வகுக்கப்பட்டுள்ளது.

(1) நேரடி ஜனநாயகம்

(2) பிரதிநிதித்துவ ஜனநாயகம்

நேரடி ஜனநாயகம் என்பது மக்கள் நேரடியாக ஆட்சிக் கருமங்களில் ஈடுபடுவதாகும். இது கிரேக்கத்தில் நடைமுறையில் நிலவியுள்ளது. நேரடி ஜனநாயகத்தில்

(i) மக்கள் நேரடியாக ஆட்சிக் கருமங்களில் ஈடுபடல்

(ii) கலந்துரையாடி தீர்மானம் எடுத்தல்

(iii) சமூகம் பணிசார் அடிப்படையில் வேறாக்கப்படுதல்

(iv) சிறுவர், பெண்கள், அடிமைகள் தவிர்ந்த யாவரும் ஆட்சிக் கருமங்களில் பங்குபற்றியமை போன்ற பல்வேறு பண்புகள் காணப்பட்டது.

பிரதிநிதித்துவ ஜனநாயகம் அல்லது மறைமுக ஜனநாயகம் என்பது மக்கள் பிரதிநிதிகள் மூலம் ஆட்சிக் கருமங்கள் நடைபெறுவதைக் குறிக்கும்.

அதாவது நேரடி ஜனநாயகம் சாத்தியமற்ற சூழ்நிலையில் தற்கால அரசுகளில் பிரதிநிதித்துவ ஜனநாயகமே நடைமுறையில் உள்ளது. இப்பிரதிநிதித்துவ ஜனநாயகம் பல்வேறு பண்புகளை கொண்டதாக விளங்குகிறது. அவ்வகையில்

(i) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்

(ii) போட்டிக் கட்சிமுறை

(iii) சட்டவாட்சி

யாப்பின் படி கருமமாற்றல்
சுதந்திரம், சமத்துவம், உரிமை உட்பட ஜனநாயக எண்ணக்கருக்கள் பின்பற்றப்படுகின்றமை
சுதந்திர நீதித்துறை
சுதந்திர ஊடகம்
வெளிப்படைத் தன்மை, மக்களிறைமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.
இவ்வாறே பல பண்புகளை உள்ளடக்கியதாக நேரடி ஜனநாயகம், பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பன விளங்குகின்றன.

(iv) மனிதன் கௌரவமாக தனது சமூக வாழ்க்கையை கொண்டு நடாத்தவும் சமூக நியாயத்தை அடைவதற்கும் சகலருக்கும் சமமான வகையில் உரித்தாக வேண்டிய சமூக உரித்துக்களே உரிமை எனலாம். அதாவது மனிதனது இன்பகர வாழ்க்கைக்கும் சுபீட்சத்திற்கும் அத்தியாவசியமான நிபந்தனைகளே உரிமைகள் ஆகும்.

இவ்வுரிமைகள் ஒரு காலத்தில் மறுக்கப்பட்ட சூழ்நிலையில் பல போராட்டங்கள் புரட்சிகள் மூலம் இவை வென்றெடுக்கப்பட்டன.
உதாணம் :- உலகில் முக்கிய புரட்சிகள்

இவ்வுரிமைகள் மனிதன் சிறந்த வாழ்வு வாழ்வதற்கு மிகவும் அத்தியாவசியமானவையாகும். இவ்வுரிமைகள் சிவில், அரசியல், பொருளாதார உரிமைகள் என பலவாறாக வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வுரிமைகளின் அவசியம், முக்கியத்துவம் கருதி பல நாடுகள் தமது யாப்பிலே உறுதிபடுத்துவதன் மூலம் அடிப்படை உரிமைகளாக அவை விளங்குகின்றன.

இவ்வுரிமைகளின் முக்கியத்துவம், நவீன வளர்ச்சி என்பவற்றுக்கு முன்னோடியாக *1945* ல் வெளியிடப்பட்ட ஐ. நா. சாசனம், *1948.12.10* ல் வெளியிடப்பட்ட சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

உரிமைகளின் முக்கியத்துவம் உணரப்பட்டாலும் உரிமைகள் மறுக்கப்படுவதும் மீறப்படுவதும் சாதாரண விடயங்கள் ஆகிவிட்டன. இந்நிலையில் உரிமைகளைப் பாதுகாக்கவென அரசுகளால் பல்வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.
அவையாவன :-

*(1)* அரசியல் யாப்பின் உத்தரவாதப்படுத்தல்

*(2)* உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை நீதிமன்றங்களிடம் ஒப்படைத்தல்

*(3)* நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாத்தல்

*(4)* சட்டவாட்சியை ஏற்றுச் செயற்படல்

*(5)* அரசாங்க சேவையும், பொலிசும் சுதந்திரமாக செயற்படல்

*(6)* சுதந்திர ஊடகங்கள்

*(7)* பொருளாதார நீதி

*(8)* உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்

என்பவற்றைக் குறிப்பிடலாம்.

## C பகுதி

*03)*

(i) இலங்கையானது கிட்டத்தட்ட *500* வருடங்கள் அந்நியர்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்ற வரிசையில் ஆங்கிலேயரே நீண்டகாலம்

இலங்கையில் ஆட்சி செய்தவராவர் (1796 - 1948) இவர்களது ஆட்சியின் விளைவாக இங்கு சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வகையில் பிரித்தானியர் காலத்தில் இங்கு ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை நோக்கின்

(1) சட்டசபை உருவாக்கப்பட்டமை

அதாவது சட்ட நிர்வாக சபை, சட்ட நிரூபண சபை என்பன உருவாக்கப்பட்டமை

(2) பிரதிநிதித்துவமுறைக்கு மக்கள் பயிற்றுவிக்கப்பட்டமை

மக்கள் பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டுச் சட்டசபையைப் பிரதிநிதித்துவம் செய்ததன் மூலம் ஆட்சியில் பங்கு கொள்ளும் நிலை ஏற்பட்டது.

(3) ஒரே நிர்வாக முறை அறிமுகப்படுத்தப்பட்டது

(4) நீதித்துறை சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டு ஒற்றை நீதிமுறை ஏற்படுத்தப்பட்டது

(5) சிவில் சேவை வளர்ச்சியடைந்தது

(6) யாப்பு ரீதியான ஆட்சிமுறை வழக்கிற்கு வந்தமை

(7) தேசிய இயக்கங்கள் உருவாகியது

(8) இனக் குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன

(9) நலன்புரி அரசானது மலரத் தொடங்கியது

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பொருளாதார மாற்றங்கள் என்றவகையில் நோக்கின்

(1) வர்த்தக பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது

(2) கட்டற்ற வர்த்தகம் அறிமுகப்படுத்தப்பட்டது

(3) சுதந்திர ஊழியர்சந்தை முறை உருவாகியது

(4) ஏற்றுமதி - இறக்குமதிப் பொருளாதார முறை அறிமுகமாகியது

(5) வங்கிச் சேவை, காப்புறுதி சேவை என்பன உருவாக்கப்பட்டது.

போன்ற மாற்றங்கள் ஏற்பட்டன.

சமூக மாற்றங்கள் என்று நோக்கும் போது

(1) இராஜகாரியமுறை நீக்கப்பட்டமை

(2) ஆங்கிலக்கல்வி அறிமுகம்

(3) கல்விகற்ற மத்திய தர வர்க்கம் உருவாகியமை

(4) சாதிமுறை வீழ்ச்சியடைந்தமை

(5) மேற்கத்தைய பழக்கவழக்கங்கள் புதிய கலாசார சூழலை ஏற்படுத்தியமை

(6) கிறிஸ்தவ மதம் பரம்பலடைந்தமை

போன்றவற்றைக் குறிப்பிடலாம்

இவ்வகையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் சமூக, பொருளாதார அரசியல் நீதியான மாற்றங்கள் ஏற்பட்டமை சிறப்புக்குரியதாகும்.

(ii) டொனமூர் யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட நிர்வாக குழுமுறை யாப்பின் முக்கிய அம்சங்களுள் ஒன்றாக விளங்குகின்றன. அத்துடன் புதியதோர் விடயமாகவும் காணப்படுகிறது. நாட்டில் சுதேச தலைவர்களுக்கு ஆட்சியலுவல்களை நடத்தக்கூடிய பயிற்சியை வழங்கல், அரசாங்க சபை உறுப்பினர்களுக்கு பொறுப்புக்களை வழங்குவதன் மூலம் அவர்களை நிர்வாகத்தில் பங்கெடுக்கச் செய்தல், பல்லின மக்களுக்கு நிர்வாகத்தில்

பங்கெடுக்க வாய்ப்பளித்தல் போன்ற காரணங்களை அடிப்படையாக வைத்து இந்நிர்வாக குழுமுறை உருவாக்கப்பட்டது.

அரசாங்க சபை உறுப்பினர்களுள் 3 அரசாங்க அதிகாரிகள் தவிர்ந்த 57 உறுப்பினர்களும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் 7 நிர்வாகக் குழுக்களாக வகுக்கப்பட்டனர்.

ஒவ்வொரு குழுவும் குறைந்தது 6 - 9 வரையான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். ஏழு நிர்வாகக் குழுக்களும் முறையே

(1) உள்ளூராட்சி

(2) உள்நாட்டலுவல்கள்

(3) விவசாயம்

(4) கல்வி

(5) சுகாதாரம்

(6) கைத்தொழில், வர்த்தகம்

(7) போக்குவரத்து

என ஏழு துறைகளுக்கும் பொறுப்பாக்கப்பட்டன. ஏனைய சிறப்பான அதிகாரங்கள் 3 அரசாங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. ஏழு நிர்வாகக் குழுக்களும் தமக்கென ஒரு தலைவரைத் தெரிவு செய்து செயற்பட்டன.

இந்நிர்வாக குழுக்கள் செயற்பாட்டினால் பல நன்மைகளும் தீமைகளும் ஏற்பட்டன. ஆயினும் இலங்கையில் அரசியல் வரலாற்றில் இவ்வம்சம் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. அத்துடன் இலங்கையர்க்கு $\frac{7}{10}$ பங்கு பொறுப்பாட்சியையும் வழங்கியதோர் அம்சமாகும்.

04)

(i) இலங்கை அரசியல் வரலாற்றில் மத மறுமலர்ச்சி இயக்கங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். கிறிஸ்தவ மதத்தின் பரம்பலால் சுதேச மதங்கள் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் அவற்றை மீள் கட்டமைக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டவையே மத மறுமலர்ச்சி இயக்கங்கள் என்றவகையில் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படலாயின. ஆறுமுகநாவலர், அநாகரிக தர்மபால, அறிஞர் சித்திலெப்பை போன்றவர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாவர்.
(இவை பற்றிய விளக்கம் தேவை)

(ii) ஒரு நாட்டில் வாழும் குறித்த வயதெல்லையைப் பூர்த்தி செய்த சகலருக்கும் இன, மத, மொழி, பால் வேறுபாடின்றி வழங்கப்படும் வாக்குரிமையே சர்வஜன வாக்குரிமை எனப்படும். இதன் பண்புகள், நன்மை, தீமைகள் என்பவற்றைக் குறிப்பிடல் வேண்டும்.

(iii) இலங்கையில் தேசிய இயக்க வளர்ச்சியில் இலங்கையர்க்காக குரல் கொடுப்பதற்காக ஒன்றிணைக்கப்பட்ட ஒரு அமைப்பாக உருவாக்கப்பட்டதே இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஆகும். இது 1919 டிசம்பர் மாதம் உருவாக்கப்பட்டது. இதன் முதலாவது தலைவராக சேர். பொன். அருணாசலம் அவர்கள் விளங்கினார்.
(நோக்கம், வளர்ச்சி, உபாயம், செயற்பாடு பற்றி குறிப்பிடல் வேண்டும்)

(iv) இலங்கையில் தேசிய இயக்க வளர்ச்சியில் இடதுசாரி இயக்கமும் முக்கிய அமைப்பாகும். இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு கற்றலுக்காக சென்ற இளைஞர்கள் இங்கு வந்து உருவாக்கிய அமைப்பாக விளங்குவதே இலங்கை இடதுசாரி இயக்கமாகும்.